## இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காத பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்கீட்டு நியம இல. 09 இன் பிரகாரம் கூட்டுத்தாபனத்தால் காசுப்பாய்ச்சல் கூற்றொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் உழைப்பு துணை ஒப்பந்த முற்பணத்திற்கான ஏற்பாட்டுக் கணக்கிலும் பணிக்கொடை ஏற்பாட்டுக் கணக்கிலும் முறையே ரூபா 37.66 மில்லியன் தொகையும் ரூபா 55.37 மில்லியன் தொகையுமான ஒதுக்கம் காசுப் பாய்ச்சல் கூற்றின் செயற்பாட்டு இலாபத்துடன் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நியம இல. 14 இன் பிரகாரம், வரிகளில் ஏற்படும் தற்காலிக மாற்றங்கள் பிற்போடப்பட்ட வரிக் கணக்கின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது ஏற்பட்ட வரி மாற்றங்கள் தொடர்பாக பிற்போடப்பட்ட வரிக் கணக்கில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நியம இல. 18 இன் பிரகாரம் நிலையான சொத்துக்களின் புத்தக மீதி பூச்சியப்பபெறுமதியாகும் போது அச் சொத்து மீள பெறுமதியிடப்பட வேண்டிய போதிலும் ரூபா 295,454,457 கிரயமான

நிலையான சொத்துக்கள் மீள்பெறுமதியிடப்படாது ரூபா 1 ஆன பெயரளவுப் பெறுமதியில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) நியம இல. 22 இன் பிரகாரம், முதலீடு தொடர்பாக ஏதேனும் ஆபத்து இருக்கையில் இது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில வெளிக்காட்டப்பட வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்தினால் ஓர் வெளிநாட்டுக் கம்பனி ஒன்றில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 5,958,715 முதலீடு செய்யப்பட்டு எவ்வித நலனும் கிடைக்கப்பெற்றிராமை இரு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் இது நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) குறிப்பு இல. 1.4 (ஆ) இன் பிரகாரம், கூட்டுத்தாபனத்தினால் கடந்த ஆண்டுகளின் போது ஒப்பந்தங்களின் இலாபங்கள் கணிப்பிடப்படுகையில் வேலை பூர்த்தி செய்யப்பட்ட 20 சதவீதத்தினைப் பார்க்கிலும் குறைவான ஒப்பந்தம் தொடர்பாக ஏற்கப்பட்ட செலவினம் ஆண்டிற்கு உரித்தான செலவினமாக கணக்கிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது இத்தகைய ஒப்பந்தங்கள் தொடர்பிலும் வேலை பூர்த்திசெய்யப்பட்ட சதவீதத்தை அடிப்படையாகக் கொண்டு இலாபம் கணிப்பிடப்பட்டிருந்தது. இவ்வொப்பந்தங்களுக்கு உரித்தான இலாபமாக ரூபா 85,494,442 காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) குறிப்பு இல. 1.3 (இ) இன் பிரகாரம், நானாவித கடன்பட்டோர் மற்றும் பெறவேண்டிய மீதிகளின் 05 ஆண்டுகள் கடந்த முழுமையான கடன்பட்டோர் பெறுமதிக்கு ஐயக்கடன் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 05 ஆண்டுகளுக்குக் குறைவான மீதிகள் தொடர்பாக எவ்வித ஒதுக்கமும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 04 ஆண்டுகளுக்கு மேற்பட்ட 05 ஆண்டுகளுக்குக் குறைவான அறவிடப்பட வேண்டிய கடன்பட்டோரின் மீதிகள் ரூபா 184,849,534 ஆகக் காணப்பட்டது. இது அடுத்த ஆண்டின் போது 05 ஆண்டுகளுக்கு மேலான மீதியாகும்

என்பதால் இவ்வடிப்படையில் ஐயக்கடன் ஏற்பாடு மேற்கொள்ளப்படுவதன் மூலம் கூட்டுத்தாபன இலாபத்திற்கு நேரடியாகத் தாக்கமளித்திருந்தது.

### 1.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிச் செலவினத்தின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய ரூபா 13,330,171 தொகையான வங்கிக் கட்டணங்களும் தரகுப் பணமும் நானாவித செலவினத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் உள்ளடக்கப்பட்ட ரூபா 170,055,132 தொகையான 16 கடன்பட்டோர் கணக்குகளின் வழமைக்குமாறான செலவு மீதிகள் இனங்காணப்பட்டு சீராக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கொள்வனவு கட்டுநிதிக் கணக்கு, விசேட காசு முற்பணக் கணக்கு, துணை ஒப்பந்தங்கள் வேலை ஆரம்பிப்பு முற்பணக் கணக்கு மற்றும் போக்குவரத்துச் செலவின முற்பணக் கணக்கு போன்ற கணக்குகளின் ரூபா 12,967,320 தொகையான அசாதாரண செலவு மீதியும் மீளச் செலுத்தப்படும் வைப்புக் கணக்கில் ரூபா 5,913,707 தொகையான அசாதாரண வரவு மீதியும் காணப்பட்டது.

(ஈ) திணைக்களங்களுக்கு இடையிலான இலாப ஈட்டல்கள் கூட்டுத்தாபனத்தின் இலாபத்தைக் கணிப்பிடுகையில் சரியாக சீராக்கப்பட்டிராமையால் உள்நாட்டு இறைவரித் திணைக்களக் கட்டிடத் திருத்தியமைத்தல் செயற்திட்டத்தின் 2009 ஆம் ஆண்டிற்கான இலாபம் ரூபா 66,531,602 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தமை மீளாய்வாண்டின் போது நிறுத்தி வைக்கப்பட்ட இலாபத்தில் இருந்து கழிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் போது நிர்மாணிப்புப் பிரிவில் 7 நடைபெறும் வேலைகள் செயற்திட்டங்களின் ரூபா 29,696,866 தொகையான செயற்பாட்டு நட்டம் ரூபா 14,622,174 தொகையான செயற்பாட்டு இலாபமாகக் காண்பிக்கப்பட்டிருந்தமையால் கூட்டுத்தாபனத்தின்

மொத்த இலாபம் ரூபா 44,319,040 ஆல் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் போது நிர்மாணிப்பு மற்றும் துணைப்பாகங்கள் பிரிவின் வேலை பூர்த்திசெய்யப்பட்ட வேலை கேள்விப் பெறுமதி ரூபா 7,246,130 தொகையான 04 செயற்திட்டங்களின் வேலைப் பெறுமதி ரூபா 7,333,084 தொகையான ஒப்பந்தக் கணக்குகளில் இருந்து கைவிடப்பட்டிருந்தது.

### 1.2.4 பொருத்தமற்ற வெளிப்படுத்தல்கள்

நானாவித கடன்பட்டோர் மற்றும் பெறவேண்டிய மீதிகளின் கீழ் காண்பிக்கப்ட்டிருந்த ரூபா 5,745,250 தொகையான நிதி மாற்ற மீதி தொடர்பாக கணக்காய்விற்கு விளக்கமளிப்பதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது.

### 1.2.5 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் கணக்கு மீதிகள் உரிய துணைப்பதிவேடுகளுடன் இணக்கம்செய்யப்பட்டிருக்கவில்லை.

| | கணக்கு விபரம் | கணக்கில் காண்பிக்கப்பட்டுள்ள மீதி | துணைப் பதிவேடுகளின் படியான மீதி | வேறுபாடு |
|---|---|---|---|---|
| (அ) | துணை ஒப்பந்தங்கள் அட்டுறு செலவினக் கணக்கு | 9,614,880 | 47,279,306 | 37,664,426 |
| (ஆ) | வாடிக்கையாளருக்குச் செலுத்த வேண்டிய பணம் | 1,383,039,997 | 1,441,131,897 | 58,091,900 |
| (இ) | வாடிக்கையாளரிடமிருந்து பெறவேண்டிய பணம் | 844,539,910 | 1,434,401,912 | 589,862,002 |

### 1.2.6 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2010 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட பின்வரும் விடயங்கள் 2011 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் ஒப்பீட்டு விடயங்களுடன் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

| | கணக்கு விபரம் | 2011 கணக்குகளின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 2010 கணக்குகளின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | வேறுபாடு |
|---|---|---|---|---|
| | | ரூபா (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) |
| (i) | நிலையான வைப்புக்கள் | 21.12 | 17.63 | 3.49 |
| (ii) | ஏனைய கடன்பட்டோர் பெறுவனவுகள் மற்றும் முற்பணங்கள் | 901.97 | 907.93 | (5.96) |
| (iii) | காசு மற்றும் காசுக்குச் சமனானவை | 335.91 | 333.44 | 2.47 |

(ஆ) மீளாய்வாண்டின் போது பின்வரும் கடன்பட்டோருக்கு கூட்டுத்தாபனத்தால் அனுப்பிவைக்கப்பட்டிருந்த மீதிகளின் உறுதிப்படுத்தற் கடிதங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட நேரடி மீதி உறுதிப்படுத்தல்களில் காண்பிக்கப்பட்ட பெறுமதி இணங்கியிராததுடன் உரிய நிறுவகங்கள் அம் மீதிகளுடன் உடன்பட்டிருக்கவில்லை.

| கணக்கு விபரம் | 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கணக்குகளில் காண்பிக்கப்பட்ட மீதி | நேரடியாக உறுதிப்படுத்தப்பட்ட மீதி | வேறுபாடு |
|---|---|---|---|
| கலாச்சார அலுவல்கள் அமைச்சு | 1.09 | 7.14 | 6.05 |
| மொறட்டுவ பல்கலைக்கழகம் | 22.69 | 2.72 | 19.97 |
| அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம் | 0.96 | 0.70 | 0. 26 |
| களனிப் பல்கலைக்கழகம் | 29.38 | 5.95 | 23.43 |

(இ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 233,195,041 தொகையான கடன்பட்டோராக இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அத்திகதியில் உள்ளவாறு இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை அப் பெறுமதிக்கான கடன்கொடுத்தோராகக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.7 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் நடைமுறை மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களில் கூடிய பெறுமதியினைக் கடன்பட்டோர் கொண்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் வியாபாரக் கடன்பட்டோர் மீதி ரூபா 4,657.374 மில்லியன் தொகையானதுடன் இதில் ரூபா 316.137 மில்லியன் தொகை 05 ஆண்டுகள் பழமைவாய்ந்த கடன்பட்டோர் மீதியாகக் காணப்பட்டது. இதில் 95 சதவீதத்திற்கு மேலான கடன்பட்டோர் அரச நிறுவகங்களாகக் காணப்பட்டமை விசேட அம்சமாகும். கடன் அறவிடப்படும் முன்னேற்றம் மிகக் குறைவான மட்டத்தில் நிலவியதுடன் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 37 சதவீதத்தினால் வியாபாரக் கடன்பட்டோர் அதிகரித்திருந்தனர். 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன்பட்டோர் மீதியான ரூபா 3,397 இற்கு உரித்தான கடன்பட்டோரிடமிருந்து எவ்வித தொகையும் 2011 ஆம் ஆண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மொத்தக் கடன்கொடுத்தோர் மீதியான ரூபா 122.759 மில்லியனில் ரூபா 2.582 மில்லியன் தொகையான மீதி 5 ஆண்டுகளுக்கு மேலாக நிலுவையாகக் காணப்பட்டன. இக் கடன்கொடுத்தோர் மீதிகளைத் தீர்ப்பதற்காக ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் துணை ஒப்பந்தக் கடன்கொடுத்தோருக்காக கூட்டுத்தாபனம் மேற்கொள்ளப்பட வேண்டிய கொடுப்பனவுகள் ரூபா 396.26 மில்லியன் தொகையானதுடன் இதில் 5 ஆண்டுகள் பழமைவாய்ந்த மீதிகள் ரூபா 41.623 மில்லியன்

தொகையாகக் காணப்பட்டது. வருட ஆரம்பத்தின் போதான துணை ஒப்பந்தங்கள் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 125.44 மில்லியன் தொகையானதுடன் ஆண்டின் இறுதியில் இக் கடன்கொடுத்தோர் மீதி 216 மில்லியனால் அதிகரித்திருந்தது.

(ஈ) கூட்டுத்தாபனத்தினால் 2000 ஆம் ஆண்டு முதல் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்தப்பட வேண்டியிருந்த ரூபா 22.512 மில்லியன் தொகையும் இதில் அறவிடப்பட வேண்டிய ரூபா 5.356 மில்லியன் தொகையும் தொடர்ந்து முன்கொண்டு வரப்பட்ட போதிலும் இதனைத் தீர்ப்பதற்கோ அல்லது சரிசெய்வதற்கோ எவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) நீண்ட காலமாக செலுத்தப்பட வேண்டியவையாக கணக்குகளில் முன்கொண்டுவரப்படும் தலதா மாளிகை கட்டுப்பாட்டுக் கணக்குகள், பௌத்த சாசன அமைச்சின் கட்டுப்பாட்டுக் கணக்கு, உள்நாட்டு இறைவரித் திணைக்களக் கணக்கு மற்றும் கட்டிடத் திணைக்களக் கணக்கு போன்ற கணக்குகளுக்குரிய செலுத்தப்பட வேண்டிய ரூபா 9.305 மில்லியன் தொகையான பணம் தீர்க்கப்படுவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.8 முற்பணக் கொடுப்பனவு நடவடிக்கைகள்

கூட்டுத்தாபனத்தினால் பல்வேறு நோக்கங்களுக்காக பாரியளவு முற்பணங்கள் தொடர்ந்து வழங்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறு வழங்கப்படும் முற்பணங்களைத் தீர்த்துவைப்பதற்கு போதியளவு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. விபரம் பின்வருமாறாகும்.

(அ) மீளாய்வாண்டின் இறுதித் தினத்தில் வழங்குனர்களுக்கு வழங்கப்பட்ட முற்பணக் கணக்குகளின் மீதி ரூபா 14,666,768 ஆனதுடன் இதில் ரூபா 1,246,816 தொகை 5 ஆண்டுகளுக்கு மேலாகக் காணப்பட்டதுடன் ரூபா 1,552,701 தொகை 4 முதல் 5 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் வழங்கப்பட்ட முற்பணங்களை பிரதிநிதித்துவப்படுத்தியது. இம் மீதியைத் தீர்க்கப்பதற்கு கூட்டுத்தாபனம் முறையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) பொருட்கள் பெறுவதற்கு முன்னர் கட்டளையுடன் காசோலைகள் வழங்கப்படுதல் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2011

திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டளையுடன் வழங்கப்பட்ட காசோலை முற்பணக் கணக்கு மீதி ரூபா 423,598,569 ஆகும். இப் பெறுமதியின் காலப்பகுப்பாய்வு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வேலைத்தளங்களில் நிதிப் பொறுப்பாளர்களுக்கு மாத்திரம் பண முற்பணம் வழங்கப்பட வேண்டிய போதிலும் இதற்கு மேலதிகமாக பல்வேறு உத்தியோகத்தர்களுக்கு பண முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் அவ்வாறு வழங்கப்பட்டிருந்த பண முற்பண மீதி ரூபா 9,904,849 ஆகக் காணப்பட்டது.

(ஈ) கூட்டுத்தாபனத்தால் துணை ஒப்பந்தங்களுக்காக வேலை ஆரம்பிப்பு முற்பணமாக வழங்கப்பட்ட பணம் குறித்த காலப்பகுதியின் போது தீர்க்கப்படாதமையையடுத்து கணக்குப் புத்தகங்களில் அம் முற்பணம் ஆண்டுதோறும் முன்கொண்டுவரப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் 5 ஆண்டுகளுக்கு மேல் காலம் கடந்த துணை ஒப்பந்த வேலை ஆரம்பிப்பு முற்பணப் பெறுமதி ரூபா 3,900,599 ஆனதுடன் உழைப்பு துணை ஒப்பந்தக்காரர்களுக்காக வழங்கப்பட்டிருந்த முற்பணப் பெறுமதியில் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்பட்டிராத முற்பண மீதி ரூபா 241,367,741 ஆகக் காணப்பட்டது.

### 1.2.9 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் கணக்கு விடயங்களிற்கு எதிரே காண்பிக்கப்பட்ட சான்றாதாரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | நிதிக்கூற்றுக்களிலுள்ள விடயங்கள் | பெறுமதி | சமர்ப்பிக்கப்பட்டிராத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா மில். | |
| (அ) | கட்டளையுடன் காசோலைகள் முற்பணக் கணக்கு | 423.59 | காலப்பகுப்பாய்வு |
| (ஆ) | பண்டிகை முற்பணக் கணக்கு | 2.12 | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இடர் கடன் கணக்கு | 7.59 | - மேற்படி - |
| (ஈ) | நாரஹென்பிட்டி செயற்பாட்டுப் பிரிவு வேறு இடத்திற்கு மாற்றப்பட்டமையால் ஏற்பட்ட மூலதனப் பெறுவனவுகள் | 22.65 | மாற்றப்பட்ட ஆவணங்கள் உள்ளடக்கப்பட்ட மூலம் மற்றும் கோவைகள் |
| (உ) | காசு மற்றும் காசிற்குச் சமனானவற்றில் உள்ளடக்கப்பட்ட 9934 ஆம் இலக்கக் கணக்கின் மீதி | 1.88 | வங்கிக் கணக்குகள், வங்கிக் கூற்றுக்கள், வங்கிக் கணக்கிணக்கம், மீதிகளின் உறுதிப்படுத்தல் |
| (ஊ) | வரையறுக்கப்பட்ட இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம் (கட்டார்) கம்பனியின் காசு மீதி | 5.95 | வங்கி உறுதிப்படுத்தல்கள், வங்கிக் கூற்றுக்கள், வங்கிக் கணக்கிணக்கம், கடன் அறிவுறுத்தற் பத்திரம். |

## 1.2.10 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் என்பவற்றுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு | கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டின் போது முதலீடு செய்யப்பட்ட ரூபா 141,707,608 தொகையிற்காக நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சரின் இணக்கப்பாடு பெறப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 2006 ஆகஸ்ட் 01 ஆம் திகதிய 28(ii) ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை மற்றும் 2009 நவம்பர் 25 ஆம் திகதிய டீஎம்எஸ்/ஈ3/43/4/265/1 ஆம் இலக்க முகாமைத்து சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் இன்றி பதவிகளை உருவாக்கவோ அல்லது வெற்றிடங்களை நிரப்பலாகாது என தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் அங்கீகரிக்கப்படாத 20 பதவிகள் உருவாக்கப்பட்டு இதற்காக 330 ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்ததுடன் அவர்களுக்காக 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 124,312,146 சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) | 2011 பெப்ரவரி 14 ஆம் திகதிய டீஎம்எஸ்/ஈ3/43/4/265/1 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களக் கடிதம் | ஆட்சேர்க்கப்படக் கூடிய பயிற்சியற்ற ஊழியர்களின் எண்ணிக்கை 500 முதல் 460 வரை குறைக்கப்பட்டு திருத்தப்பட்டிருந்த போதிலும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஈடுபடுத்தப்பட்டிருந்த ஊழியர்களின் எண்ணிக்கை 775 ஆனமையால் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 315 ஆல் அதிகரித்திருந்தது. தூரப் பிரதேச வேலைத்தளங்களில் சேவைத் தேவைப்பாட்டின் நிமித்தம் ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டுள்ளதாகவும் அவ்வேலைத் தளங்கள் முடிவடைவதுடன் அவர்களது சேவையும் முடிவுறுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் தலைவர் அறிவித்திருந்தார். |
| (ஈ) | 2004 ஏப்ரல் 28 ஆம் திகதிய பீடீ/356/303/23 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் கடிதம் | சுய விருப்பில் ஓய்வடையும் திட்டத்தின் கீழ் பெறப்பட்டிருந்த பணத்தில் நட்டஈடு செலுத்தப்பட்டு எஞ்சிய காசு மீதி திறைசேரிக்குச் செலுத்தப்பட வேண்டிய போதிலும் ரூபா 20,278,812 தொகையான எஞ்சிய காசு மீதி 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் விளைவித்திருந்த வரிக்கு முன்னரான தேறிய இலாபம் ரூபா 252.97 மில்லியனை

இதற்கொப்பான முன்னைய ஆண்டின் தேறிய இலாபம் ரூபா 133 மில்லியனுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 119.97 மில்லியன் அதிகரிப்பு காண்பிக்கப்பட்டிருந்தது.

## 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கூட்டுத்தாபனத்தால் மீளாய்வாண்டின் போது நிர்மாணப் பிரிவின் ஒப்பந்த இலாபத்தைக் கணிப்பிடுகையில் இலங்கை கணக்கீட்டு நியம இல. 13 இன் பிரகாரம் பூர்த்தியாகும் சதவீத முறைமைப்படி இலாபம் கணிப்பிடப்பட்டிராத காரணத்தால் மீளாய்வாண்டின் இலாபம் ரூபா 44.319 மில்லியனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் வங்கி மேலதிகப் பற்று ரூபா 137.91 மில்லயன் தொகையும், காசு மற்றும் காசுக்குச் சமனானவை ரூபா 270.86 மில்லியன் தொகையாகியது. கூட்டுத்தாபனத்தினால் போதிய நிதி முகாமைத்துவத்தைப் பேணுவதற்கு முடியாது போனமையால 2013 பெப்ரவரி 28 இல் உள்ளவாறு வங்கியால் சமர்ப்பிக்கப்பட்ட வங்கிக் கூற்றின் பிரகாரம் வங்கி மேலதிகப் பற்று ரூபா 478.78 ஆகக் காணப்பட்டதுடன் அத்திகதியில் உள்ளவாறான காசு மீதி ரூபா 8.15 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. இந் நிலை கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்து இயங்கும் தன்மையில் பாதகமான முறையில் தாக்கத்தை விளைவித்தமை அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கூட்டுத்தாபனத்திற்குரிய மாத்தளை டொலமைட் செயற்பாட்டுப் பிரிவின் செயற்பாட்டு நடவடிக்கைகளது மீளாய்வின் போது கடந்த 14 ஆண்டுகளில் 2006 ஆம் ஆண்டு தவிர்ந்த ஏனைய சகல ஆண்டுகளிலும் நட்டத்துடன் இயங்கியிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 5 மில்லியன் தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது. இக்

காலப்பகுதியின் போது பெறப்பட்ட திரண்ட நட்டம் ரூபா 37.6 மில்லியன் தொகையாகும்.

(ஆ) தங்கொட்டுவ செங்கல் மற்றும் தளபாட உற்பத்திப் பிரிவு 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 450,674 தொகையான நட்டத்தை அடைந்திருந்ததுடன் கடந்த 15 ஆண்டுகளில், 13 ஆண்டுகளில் நட்டத்தை அடைந்திருந்தது. அத் திரண்ட நட்டம் ரூபா 23.45 மில்லியன் தொகையாகும். இவ்வாறே 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2011 ஆம் ஆண்டின் போது கூட்டுத்தாபனத்தின் நிர்மாண நடவடிக்கைகளுக்காக இப் பிரிவினால் தயாரக்கப்படும் செங்கற்களின் பயன்பாடு ரூபா 6,014,891 முதல் ரூபா 3,972,305 வரை குறைவடைந்திருந்ததுடன் இது 31 சதவீதத்தைக் கொண்டிருந்தது.

(இ) இயந்திர மற்றும் மின்சாரப் பிரிவிற்கு உரித்தான பாலியகொட வேலைத்தளம் கடந்த ஆண்டின் போது ரூபா 16,250,138 தொகையான தேறிய நட்டத்தை அடைந்திருந்ததுடன் மீளாய்வாண்டின் போதும் ரூபா 3,430,002 தொகையான ஓர் நட்டத்தை அடைந்திருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது நிர்மாண மற்றும் உதிரிப் பாகப் பிரிவின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட வெலிகந்த செயற்பாட்டுப் பிரிவு ரூபா 1,851,510 தொகையான தேறிய நட்டத்தை அடைந்திருந்தது.

(உ) இயந்திர உபகரணப் பிரிவின் 21 டிப்போக்களினதும் 5 வேலைத்தளங்களினதும் ரூபா 179.43 மில்லியன் தொகையான புரள்விற்கு மேலாக ரூபா 235.30 மில்லியன் தொகையான செயற்பாடு மற்றும் பராமரிப்புச் செலவினம் ஏற்பட்டிருந்ததுடன் 06 டிப்போக்களிலிருந்தும் ஒரு வேலைத்தளத்திலிருந்தும் எவ்வித வருமானமும் மீளாய்வாண்டின் போது உழைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) புதிய செயற்திட்டம் கிடைக்கப்பெற்றிராமையால் ஆலொசனைச் சேவைகள் பிரிவினதும் நிர்மாண மற்றும் உதிரிப் பாகப் பிரிவினதும் வருமானம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு முறையே 43 சதவீதமாகவும் 40 சதவீதமாகவும் குறைவடைந்திருந்தது.

(எ) நிர்மாணிப்பு, இயந்திர உபகரணப் பிரிவு மற்றும் மின்சார மற்றும் நிர்மாண உதிரிப்பாகங்கள் போன்ற பிரிவுகளுக்குரிய நிலையான 12 வேலைத்தளங்களுக்கு மீளாய்வாண்டின் வருமானம், மொத்தச் செலவினம், சம்பளங்கள் மற்றும் ஊதியங்கள், மொத்த இலாபம் மற்றும் தேறிய இலாபம் மீளாய்வு செய்யப்படுகையில் அதன் சகல வேலைத்தளங்களினதும் வருமானத்திற்கு ஒப்பாக மொத்தச் செலவினம் 78 சதவீதத்திற்கும் 143 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சிலிருந்ததுடன் 04 வேலைத்தளங்களில் நட்டம் ஏற்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக 05 வேலைத்தளங்களில் மொத்தச் செலவினத்திற்கு ஒப்பாக சம்பளங்களும் ஊதியச் செலவினங்களும் 50 சதவீதம் முதல் 70 சதவீதம் வரையான வீச்சிலான சதவீதத்தைக் கொண்டிருந்தது.

## 3.2 முகாமைத்துவச் செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரசட்டத்தின் 153 ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தால் வரி நெறிப்படுத்தல் பெற்றிருந்த போதிலும் சேவையைப் பெற்றுக்கொள்ளும் நிறுவகம் முறையாக அறிவுறுத்தப்படாமையால் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிடித்து வைத்தல் வரியான ரூபா 71,208,053 தொகையை சேவையைப் பெற்றுக்கொள்ளும் நிறுவகம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு நேரடியாகச் செலுத்தியிருந்தது.

(ஆ) நிலையான வைப்பு வட்டி வருமானத்திலிருந்து பிடித்து வைத்தல் வரி கழிக்கப்படுவது தடுக்கப்படுவதற்கான நெறிப்படுத்தல் பெற்றுக்கொள்ளப்படுவதற்கு கூட்டுத்தாபனம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு 2011 திசெம்பர் 16 ஆம் திகதி சமர்ப்பித்திருந்த விண்ணப்பப்பத்திரம் ‘‘கூட்டுத்தாபனம் தமது வரிப் பொறுப்பை முறையாக நிறைவேற்றாமை” எனும் காரணத்தால் நிராகரிக்கப்பட்டிருந்தது. ஆகையால் வங்கி, 2011 ஆம் ஆண்டின் போது மாத்திரம் வட்டி வருமானத்தில் ரூபா 509,536 தொகை பிடித்து வைத்தல் வரியாக கழித்து உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்திருந்ததுடன் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வட்டி வருமானத்திலிருந்தான பிடித்து வைத்தல் வரிக் கணக்கின் திரண்ட மீதி ரூபா 6,417,251 ஆகக் காணப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான வரி முறைப்படி கணிப்பிடப்பட்டிராமையால் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 13,567,215 தொகை தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரி நிலுவையாக கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) பெறுமதி சேர் வரி கணிப்பிடப்பட்டு செலுத்தப்படுகையில் ரூபா 29,516,563 தொகையான புரள்வு வரிப் பெறுமதி கருத்திற்கொள்ளப்படாது செலுத்தியதன் காரணமாக ரூபா 20,665,484 தொகையான பெறுமதி சேர் வரித் தொகை 2002 ஆம் 2003 ஆம் ஆண்டுகளின் போது மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறும் இத் தொகையை தீர்த்துவைப்பதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது.

(உ) கூட்டுத்தாபன முகாமைத்துவத்தால் கடந்த காலங்களில் பெருந்தொகையான வரிப் பொறுப்புகள் முறையாகத் தீர்த்துவைக்கப்படாமை மற்றும் வரி முகாமைத்துவத்தின் நலிவு காரணமாக 2011 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட வேண்டிய இறுதி வரிப் பெறுமதி தொடர்பாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் 2012 ஒக்டோபர் 31 ஆம் திகதி வரையிலும் இணக்கப்பாட்டிற்கு வந்திருக்கவில்லை. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் 2012 பெப்ரவரி 20 ஆம் திகதிய 409007970/டீரீஆர்ரீ ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம் 2009 ஆம் ஆண்டிற்கு முன்னரான பெருமளவு வரிப் பட்டியல்களை முறைப்படி தீர்த்துவைப்பதற்கு முடியாது போனமையால் நிலுவையான புரள்வு வரி, தேசிய பாதுகாப்பு வரி, பெறுமதி சேர் வரி, சிக்கன சேவைக் கட்டணம் மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரி என 71 மதிப்பீட்டு அறிவித்தல்களுக்குரிய ரூபா 77,831,984 தொகையான தண்டப்பணத்துடன் சேர்த்து ரூபா 291,450,532 தொகையான வரிப் பொறுப்புகள் ஏற்பட்டிருந்தமை அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஊ) 2009 ஆம் ஆண்டின் பின்னரான வரிப் பொறுப்புகளுக்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட 15 மதிப்பீட்டு அறிவித்தல்களில் ரூபா 33,538,338 தொகையான தண்டப்பணம் உள்ளடங்கலாக ரூபா 88,363,835 தொகையான வரிப் பொறுப்புகள் ஏற்பட்டிருந்தன.

(எ) 2010 ஆம் ஆண்டிலிருந்து நிலவிய ரூபா 2,119,535 தொகையான பண்டங்கள் மற்றும் சேவைகள் வரி, ரூபா 3,541,485 தொகையான தேசத்தைப் பாதுகாக்கும் வரி, ரூபா 438,636,859 தொகையில் 10 சதவீதமாகச் செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி, ரூபா 43,933,142 தொகையில் 20 சதவீதமாகச் செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரித் தொகையும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் இணக்கம் செய்யப்படாது மாற்றமடையாது காணப்பட்டது.

## 3.3 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) செட்டிக்குளம் மெனிக்பாமில் இடம்பெயர்ந்தவர்களுக்கான வீடுகள் நிர்மாணிப்புச் செயற்திட்டத்திற்காக கூரைத் தகடுகளின் கொள்வனவிற்காக தனியார் நிறுவகம் ஒன்றிற்கு பொருட்கள் பெறப்படுவதற்கு முன்னர் செலுத்தப்பட்ட ரூபா 6,944,000 தொகையிற்காக ரூபா 3,318,000 பெறுமதியான கூரைத் தகடுகள் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தன. இதன் காரணமாக கூட்டுத்தாபனம் மேலதிகமாகச் செலுத்தியிருந்த ரூபா 3,626,000 தொகையை அறவிட்டுக்கொள்வதற்கு வழக்குத் தொடரப்பட்டிருந்தது. இப் பணம் பகுதியளவில் தீர்க்கப்பட்டுவந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் மேலும் ரூபா 1,946,690 தொகை உரிய கம்பனியிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலையில் காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் போது எரிபொருள் கட்டணம், வாடகைக்கமர்த்தப்பட்ட வாகனக் கட்டணம் மற்றும் போக்குவரத்துப் படிப்பணத்திற்காக கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்த செலவினம் ரூபா 121,249,049 ஆக இருந்ததுடன் இது உழைக்கப்பட்ட தேறிய இலாபத்தின் 59 சதவீதமான உயர் பெறுமதியைக் கொண்டிருந்தது.

## 3.4 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2008 ஆம் ஆண்டு முதல் வெளிநாடுகளில் நிர்மாணச் செயற்திட்டங்களை ஆரம்பித்து வருமானத்தை ஈட்டுவதற்கு

கூட்டுத்தாபனம் ஊக்கம் எடுத்திருந்ததுடன் இதற்காக ரூபா 13,130,730 தொகையான பணம் செலவிடப்பட்டிருந்தது. எனினும் எந்தவித வெளிநாட்டு நிர்மாணிப்பையும் ஆரம்பிப்பதற்கு, கொள்வனவுகளைப் பெற்றுக்கொள்வதற்கோ, வருமானத்தை உழைப்பதற்கோ மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் முடியாதுபோயிருந்ததுடன் ஏற்கப்பட்ட சகல செலவினங்களும் விளைவற்ற செலவினமாகக் காணப்பட்டது.

(ஆ) வெளிநாடுகளில் நிர்மாணச் செயற்திட்டங்களை ஆரம்பிப்பதற்காக ஸ்தாபிக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபன (கட்டார்) கம்பனியின் வங்கிக் கொடுக்கல் வாங்கல்களுக்காக டோகா வங்கிக் கணக்கிற்கு 2009 ஆம் ஆண்டின் போது வைப்பில் இடப்பட்ட ரூபா 5,958,715 தொகையும் மீளப் பெறப்படுவதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது.

(இ) நாடெங்கிலும் சிவில் வேலைகளை விரிவுபடுத்தும் நோக்கில் அங்கீகாரம் இன்றி 49 பேர் சந்தைப்படுத்தல் மேம்பாட்டு உத்தியோகத்தர்களாக ஆட்சேர்க்கப்பட்டிருந்ததுடன் அவர்களுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 19,048,240 தொகை பணம் சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது. எனினும், மாத்தளை, தங்கொட்டுவ போன்ற பகுதிகளில் உள்ள உற்பத்தி வேலைத்தளங்களில் மீளாய்வாண்டின் போதும் புரள்வு குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்திராததுடன் அவை தொடர்ந்தும் நட்டம் அடைந்திருந்தது. இதற்கு மேலதிகமாக புதிய சிவில் செயற்திட்டங்கள் எதுவும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், வியாபார மேம்பாட்டுச் செலவினமாக ரூபா 3,587,141 தொகை செலவிடப்பட்டிருந்தது.

### 3.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக போதிய முகாமைத்துவ நடைமுறை பின்பற்றத்தவறியமையால் 2009 ஆம் 2010 ஆம் ஆண்டுகளின் போது கூட்டுத்தாபனத்தால் செயற்படுத்தப்பட்ட 64 நிர்மாணிப்பு வேலைகளுக்காக ரூபா 301.3 மில்லியன் தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது. இந் நட்டம் மேலதிக வேலைகளாலும் விலை

அதிகரிப்பாலும் ஏற்பட்டதெனவும் பின்னர் சேவை தருனரிடமிருந்து இப் பெறுமதியை அறவிட்டுக்கொள்ள முடியும் எனவும் கூட்டுத்தாபனத் தலைவர் அறிவித்திருந்த போதிலும் 2011 திசெம்பர் 31 ஆம் திகதி வரை இவ் 64 செயற்திட்டங்களில் எவற்றிற்கும் பின்னர் பணம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அச் செயற்திட்டங்களின் நட்டம் அவ்வாறிருக்கையில் 2011 ஆம் ஆண்டின் போதும் மேலும் 19 செயற்திட்டங்களிலிருந்து ரூபா 130.74 மில்லியன் தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஆ) கேள்விப் பெறுமதி ரூபா 1,444 மில்லியன் தொகையான கெத்தாராம சர்வதேச கிரிகெட் விளையாட்டரங்கு நவீனமயமாக்கல் வேலைத்தளத்தின் செய்யப்பட்ட வேலைக்கான பெறுமதி ரூபா 1,408 மில்லியனுக்காகப் பெறவேண்டிய பெறுமதி சேர் வரித்தொகையான ரூபா 168.99 மில்லியன் ஆன மொத்தத் தொகையும் இலங்கை கிரிகெட் சபையினால் கூட்டுத்தாபனத்தால்

பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. கிரிகெட் சபைக்கு பெறுமதி சேர் வரி விலக்குகள் கிடைப்பதே இதற்கான காரணமெனக் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், நிதி திட்டமிடல் அமைச்சுப் பணிப்பாளர் நாயகத்தின் எப்பீ/06/20/03/03/19 (எஸ்பீ – Vol ii) ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் 2011 பெப்ரவரி 01 ஆம் திகதி முதல் 2011 மே 01 ஆம் திகதி வரையான மூன்று மாதங்களுக்குள் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளுக்காக மாத்திரம் கிரிகெட் சபை வரிச் சலுகையைப் பெற்றிருந்தமையால் இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட மேற்குறித்த செயற்பாடுகளுக்கான வரிச் சலுகைகள் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை என்பது தெளிவாகியது. ஆகையால் செய்யப்பட்ட வேலைக்காக பெற்றுக்கொள்ளப்பட்டிராத ரூபா 168.99 மில்லியன் தொகையான பெறுமதி சேர் வரி கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட நட்டமாகக் கருதப்பட முடியும். இச் செயற்திட்டத்திற்கு உரித்தாக மேற்கொள்ளப்பட்ட வேலைக்காக பெறுமதி சேர் வரி அல்லாது மேலும் ரூபா 321.5 மில்லியன் 2013 மார்ச் 15 ஆம் திகதியில் உள்ளவாறும் கூட்டுத்தாபனத்திற்குக் கிரிகெட் சபையிடமிருந்து பெறவேண்டியதாக இருந்தது.

## 3.6 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2011 யூன் 16 ஆம் திகதி முதல் 2012 யூன் 15 ஆம் திகதி வரையான ஒரு வருட காலப்பகுதிக்காக மாத்திரம் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு ஆயுட் காப்புறுதியையும் மருத்துவக் காப்புறுதியையும் பெற்றுக்கொடுப்பதற்காக 2011 யூன் 16 ஆம் திகதி ரூபா 5,885,178 தொகை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் இக் காப்புறுதி மேவுகை 2012 யூன் 15 ஆம் திகதியின் பின்னர் செயற்பாட்டில் இருக்கவில்லை. தொழிற் சங்கங்களின் தீர்மானம் கிடைக்கப்பெற்றதை அடுத்து முகாமைத்துவத்துடன் கலந்துரையாடி புதிய காப்புறுதி முறையை ஏற்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாக தலைவர் அறிவித்திருந்தார்.

(ஆ) கணக்குகள், நிர்வாகம் மற்றும் இருப்புக் கட்டுப்பாடுகள் போன்ற பகுதிகளைக் கணனிமயமாக்கப்படுவதற்காக தனியார் கம்பனி ஒன்றுடன் 2006 நவம்பர் 10 ஆம் திகதி கூட்டுத்தாபனம் ஏற்படுத்திய உடன்படிக்கையின் பிரகாரம் அத் திகதி முதல் மூன்று மாதகாலத்திற்குள் உரிய செயற்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கப்பட வேண்டிய போதிலும் 2010 ஆம் ஆண்டின் போதும் சம்பள முறைமை மாத்திரம் கணனிமயமாக்கப்பட்டிருந்தது. இதற்காக உரிய கம்பனிக்கு ரூபா 1,785,574 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அக் கணனி முறைமை வினைத்திறனற்று இருந்தமையால் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 1,222,412 தொகையான முற்பணம் வேறோர் கம்பனிக்குச் செலுத்தப்பட்டு (Sage Licensed Vender) புதிய தகவல் முறைமைக்கு மாறுவதற்கு கூட்டுத்தாபன முகாமைத்துவம் தீர்மானித்திருந்தது. இவ்வாறு புதிய தகவல் முறைமை அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும் 2012 ஆம் ஆண்டிற்குரிய காலாண்டுக் கணக்குகள் எதுவும் 2013 மார்ச் 31 இல் உள்ளவாறும் கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது.

## 3.7 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கூட்டுத்தாபனத்தால் அளவீட்டுப் பட்டியல் (BOQ) தயாரிக்கப்படுவதற்கு முன்னர் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவது வழக்கமாகியிருந்ததுடன் செய்யப்பட்ட வேலைக்காக சேவை வழங்குனரிடமிருந்து முற்பணத்தொகை பெறப்பட்டு வேலை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வந்தது. இந் நிலை முறையான நிர்மாணங்களை மேற்கொள்வதற்கான முறையான நடைமுறைக்கு மாறாகியிருந்தது. இவ்வாறே பின்னர் தயாரிக்கப்பட்ட அளவீட்டுப் பட்டியலில் குறிப்பிடப்பட்ட பெறுமதிக்கு மேலாக செலவினங்கள் செய்யப்பட்டிருந்தமையால் கூட்டுத்தாபனம் நட்டமடைந்திருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

(ஆ) 21 நிர்மாண ஒப்பந்தங்களுக்காக கேள்விப் பெறுமதிக்கும் மேலாக செலவிடப்பட்டிருந்தமையால் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 85.55 மில்லியன் தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது. எவ்வாறெனினும், நிர்மாணத் துறையில் பெருமளவு நன்மதிப்பைக் கட்டியெழுப்பியுள்ள கூட்டுத்தாபனத்தின் நோக்கம் தரமுள்ள நிர்மாணிப்பை நாட்டிற்கு வழங்குவதினால் சில செயற்திட்டங்கள் நட்டமடைந்த போதிலும் தொடர்ந்தும் இலாபகரமான மட்டத்தில் கொண்டு நடாத்துவதற்கே முயற்சிப்பதாக தலைவர் அறிவித்திருந்தார்.

(இ) கூட்டுத்தாபனத்தால் பொறுப்பேற்கப்பட்ட சில நிர்மாண நடவடிக்கைகளின் ஆலோசனை நடவடிக்கைகள் கூட்டுத்தாபன ஆலோசனைப் பிரிவால் மேற்கொள்ளப்படுகின்றது. செய்யப்பட்ட வேலைக்காக நிர்மாணப் பிரிவால் தயாரிக்கப்பட்ட பட்டியல் ஆலோசனைப் பிரிவால் 21 நாட்களுக்குள் சான்றுறுதிப்படுத்தப்பட வேண்டும் எனினும் 17 செயற்திட்டங்களின் பட்டியல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் சான்றுறுதிப்படுத்தல் 03 மாதங்கள் முதல் 03 ஆண்டுகள் வரையான காலப்பகுதியால் தாமதமடைந்திருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. இவை சேவை வழங்குனரால் பணம் பெற்றுக்கொள்வதில் தாமதம் ஏற்படுவதற்கு

நேரடியாகத் தாக்கமளித்திருந்தது. உதாரணங்கள் கீழே தரப்படுகின்றன.

எடுத்துக்காட்டாக :

| செயற்திட்ட இல. | விபரம் | ஆலோசனைப் பிரிவிற்கு பட்டிலைச் சமர்ப்பித்திருந்த திகதி | பட்டியல் சான்றுறுதிப்படுத்துவதில் தாமதக் காலம் 2013 மார்ச் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நாட்களின் எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலின் பெறுமதி |
|---|---|---|---|---|
| | | | | ரூபா |
| 1620 | சேருவல ரஜமஹா விகாரை சிலைவைக்குமிடம் | 2010.03.02 | 1084 | 2,585,943 |
| 1622 | சேருவாவில் சுற்றுலா விடுதி | 2010.07.22 | 921 | 2,320,583 |
| 1615 | ரஜரட்டை பல்கலைக்கழகம் அறுவைச் சிகிச்சை நிலையக் கட்டிடம் | 2010.09.09 | 881 | 12,657,400 |

## 3.8 கூட்டுத்தாபனத்தின் வளங்கள் வேறு அரச நிறுவகங்களுக்கு வழங்குதல்

2003 யூன் 02 ஆம் திகதிய இல. பீஈடி/ 12 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 9.4 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு முரணாக மீளாய்வாண்டின் இறுதியில் கூட்டுத்தாபனத்தினால் 25 வாகனங்கள் நிர்மாணிப்பு மற்றும் பொறியியல் சேவைகள் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தன. இவ்வாகனங்களிற்கான எரிபொருளாக ரூபா 5,344,302 தொகையும், வாடகைக் கட்டணமாக ரூபா 6,353,275 தொகையுமாக ரூபா 11,677,577 கூட்டுத்தொகையான தொகை செலவிடப்பட்டிருந்தது. வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனத்திற்காக 10 சாரதிகள் முழுநேர அடிப்படையில் அமைச்சின் சேவைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அவர்களுக்கு ரூபா 3,337,981

தொகையை சம்பளமாகவும் மேலதிக நேரப்படியாகவும் ஒன்றிணைந்த படியாகவும் கூட்டுத்தாபனம் செலவிட்டிருந்தது.

## 3.9 மனித வள முகாமைத்துவம்

| பதவியணியினர் விபரம் | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது |
|---|---|---|
| நிரந்தரம் | 1,671 | 1,693 |
| ஒப்பந்தம் | 517 | 721 |
| ஆமையம் | 95 | 28 |
| கூட்டுத்தொகை | 2,283 | 2,442 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2011 திசெம்பர் 31 ஆம் திகதி வரை கூட்டுத்தாபனத்திற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 2249 ஆன போதிலும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு மேலதிகமாக 193 பேர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் உயர் முகாமைத்துவத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் 04 பிரதிப் பொது முகாமையாளர் பதவிகளும் பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் பதவியும் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்தன.

## 4. கணக்களி பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு பூர்த்தியடைந்து 60 நாட்களுக்குள் வரைவுக் கணக்கு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை

அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் ஒரு வருட காலத்தின் பின்னர் அதாவது 2013 மார்ச் 01 ஆம் திகதி 2011 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 4.2 கூட்டுத்திட்டம்

அரச முயற்சிகள் திணைக்களத்தின் 2007 திசெம்பர் 18 ஆம் திகதிய பீஈடீ/ 47 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரமும் அரச முயற்சிகள் திணைக்களத்தின் நல்ஆளுகை தொடர்பான வழிகாட்டியின் 05 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம், நாளதுவரையாக்கப்பட்ட கூட்டுத்திட்டம் குறிப்பிடப்பட்ட வகையில் விபரமாக தயாரிக்கப்பட்டு நிதியாண்டு ஆரம்பிக்கப்படுவதற்கு 15 நாட்களுக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் பொது முயற்சிகள் செயற்பாட்டுக் குழுச் செயலாளர் மற்றும் அதன் ஓர் பிரதி பொது முயற்சிகள் திணைக்களச் செயலாளருக்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்தினால் அவ்வாறு செய்யப்பட்டிருக்காததுடன் 2010 - 2015 ஆம் ஆண்டுகளின் போது தயாரிக்கப்பட்ட கூட்டுத்திட்டம் 2011 ஆம் ஆண்டின் போது சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இத்திட்டத்தைப் போன்று 2012 - 2015 வரையான காலப்பகுதிக்காக 2012 ஒக்டோபர் மாதம் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த கூட்டுத்திட்டத்தில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1957 இன் 49 ஆம் இலக்க கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் படி பின்வரும் நோக்கங்கள் கூட்டுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(i) பேற்றோலிய உற்பத்தி விற்பனைக்கான வசதிகளுடன் வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் திருத்தவேலைகளுக்கான நிலையம் ஒன்றை நடாத்தல்.

(ii) தொழில்நுட்ப நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும் எவ்வித வகையையேனும் சார்ந்த உபகரணங்களோ அல்லது இயந்திர உபகரணங்களோ அல்லது தொடர்பான உதிரிப்பாகங்களோ அல்லது கருவிகளும் துணைக்கருவிகளுமோ தயாரிக்கப்படும் ஓர் செயற்திட்டம் நடாத்தப்படுவதாகவோ அல்லது

கம்பனியாலோ அல்லது நபர்களுக்கான முகவர் நிறுவகமாகச் செயற்படல்.

(ஆ) 2007 திசெம்பர் 18 ஆம் திகதிய பீஈடீ/47 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்ட 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பந்தியின் பிரகாரம் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(i) கூட்டுத்திட்டத்தின் செயற்பாடுகள் செயற்பாட்டுத்திட்டத்திலும் பாதீட்டிலும் சம்பந்தப்பட்ட இணைப்பு காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) குறித்த ஆண்டின் முடிவில் கூட்டுத்திட்டத்தின் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவது தொடர்பான முன்னேற்றத்தையும் செயற்படாத மற்றும் மந்த நிலையில் செயற்படும் பிரிவுகள் தொடர்பாகவும் மதிப்பிட்டு எதிர்வரும் நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டிராததுடன் பணிப்பாளர் சபையின் கவனத்திற்கும் இது உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) கூட்டுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட வருடாந்த செயற்பாடுகளுக்கு உரித்தாக ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் உத்தியோகத்தர்கள் எய்த வேண்டிய இலக்குகளையும் செயற்திறனையும் காண்பித்திருந்த போதிலும் உரிய இலக்குகள் போதியளவு பெறுமதியுடையவையாகக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கூட்டுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பகுப்பாய்வுசெய்யப்பட்ட இலாப நட்டக் கூற்றில் குறிப்பிடப்பட்ட இலாபத்தை அடைகின்ற வழிகளை ஆண்டு தோறும் அவற்றிலுள்ள உள்ளக தொடர்பு முறையையும் விளக்கியிருக்கவில்லை.

## 4.3 செயற்பாட்டுத் திட்டம்

கூட்டுத்தாபனத்தினால் 2006 ஆம் ஆண்டிலிருந்து வருடாந்தம் நாளதுவரையாக்கிய கூட்டுத்திட்டத்தையும் செயற்பாட்டுத்திட்டத்தையும் தயாரித்திருக்கவில்லை. இதன் காரணமாக தெளிவான நோக்குடன்

எதிர்காலத்தில் எய்தப்பட வேண்டிய நோக்கங்கள் எவை என்பது குறித்தும் அந் நோக்கங்கள் ஒவ்வொரு ஆண்டின் போதும் எய்தப்படும் விதம் குறித்தும் முறையான அறிவின்றி செயற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 4.4 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வருடாந்தக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகளில் செயலாற்றல் கணக்காய்விற்குப் போதுமானளவு கவனம் கோரப்பட்டிராததுடன் செயலாற்றல் மதிப்பீட்டிற்கு கணக்காய்வு ஐயவினாக்கள் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆண்டின் போது வேலைத்தளங்களுக்கு மாத்திரமே கணக்காய்வு ஐயவினாக்கள் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் இறுதியில் இறுதிக் கணக்குகளின் ஆய்விற்காக போதிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.5 கொள்வனவுத் திட்டம்

அரசாங்கக் கொள்வனவு நடைமுறை வழிகாட்டிக் கைநூலின் 4.2 ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தால் 2011 ஆம் ஆண்டிற்காக கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.6 பாதீட்டுக் கட்டுப்பாடு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுத் தரவுகள், பாதீடப்பட்ட தொகைகளுடன் ஒப்பிடுகையில் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய முரண்கள் அவதானிக்கப்பட்டன. அதாவது மீளாய்வாண்டின் போது பாதீடப்பட்ட தொகைகள் உள்ளபடியான தொகைகளுடன் ஒப்பிடப்படுகையில் மின்சாரம் மற்றும் இயந்திரப் பிரிவுகளின் உள்ளபடியான இலாபம் 1266 சதவீதத்தால் உயர்வடைந்திருந்ததுடன் நிர்மாணிப்பு, விசேட செயற்பாடு மற்றும் இயந்திர உபகரணப் பிரிவுகளில் உள்ளபடியான இலாபம் முறையே 35 சதவீதம், 29 சதவீதம், 54 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்திருந்தது. இவ்வாறே 04 நிரந்தர வேலைத்தளங்களுக்காக செயற்பாட்டு நட்டம் மதிப்பிடப்பட்டு வருடாந்த பாதீடு தயாரிக்கப்பட்டிருந்தது. ஆகையால் பாதீட்டு யதார்த்தமாகத்

தயாரிக்கப்பட்டிராததுடன் இது ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.7 வருடாந்த அறிக்கை சமர்ப்பித்தல்**

கூட்டுத்தாபனத்தால் 2010 ஆம் ஆண்டிற்கு உரித்தான வருடாந்த அறிக்கை மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது கூட்டுத்தாபனத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்பட வேண்டும்.

(ஆ) கணக்கீடு
(ஆ) பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்
(இ) நிதி முகாமைத்துவம்
(ஈ) வரி முகாமைத்துவம்
(உ) பாதீட்டுக் கட்டுப்பாடு மற்றும் கூட்டுத்திட்டம்
(ஊ) ஒப்பந்த நிர்வாகம்